புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com



ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன்

• திருவள்ளுவர் ஆண்டு 2056 • ஆகஸ்ட் 21, 2025 • புரட்சி 25 • முழக்கம் 36 • விலை ரூ.6.00

## மடியட்டும் ஆணவப் படுகொலைகள்

# கழகத்தின் ஜாதி எதிர்ப்புப் பரப்புரை











"மனிதம் நமது அடையாளம்! ஜாதி நமக்கு அவமானம்! மடியட்டும் ஆணவப் படுகொலைகள்!" என்ற தலைப்பில் கழகத் தோழர்கள் ஜாதி எதிர்ப்பு கூட்டங்களை நடத்தி வருகின்றனர். அதன் செய்தி விவரம்:

**சென்னை:** ஜாதி ஆணவப் படுகொலைகளுக்கு எதிராக தெருமுனைக் கூட்டம் 12.08.2025 அன்று திருவல்லிக்கேணி நடேசன் சாலையில் நடைபெற்றது. கோபிநாத் (திருவல்லிக்கேணி பகுதி தலைவர்), தலைமையில், லட்சுமணன் முன்னிலையில் நடைபெற்றது.

சிற்பி இராசனின் மந்திரமா? தந்திரமா அறிவியல் விளக்க நிகழ்வு பொதுமக்களை தோழர்களை வெகுவாக ஈர்த்தது. ஜாதி ஆணவப் படுகொலை செய்யப்பட்ட நெல்லை கவின் படத்திறப்பு நடைபெற்றது. வழக்கறிஞர் சாரநாத் (மாவட்டச் செயலாளர் -விசிக) ஜாதி எதிர்ப்புப் பரப்புரை தொடர்ந்து தொடர வேண்டும் என்றும் கழக செயல்பாடுகளை பாராட்டி உரை நிகழ்த்தினார். நிறைவாக சிறப்புரையாற்றிய பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் ஜாதி எதிர்ப்புப் பரப்புரையின் தேவை குறித்து பல தகவல்களை பகிர்ந்து கொண்டார்.

**இரண்டாம் நாள்:** 13.08.2025 அன்று சென்னை சி.என்.கே சாலை திருவல்லிக்கேணி பகுதியில் த.நா சூர்யா(திருவல்லிக்கேணி பகுதி அமைப்பாளர்) தலைமையில் நடைபெற்றது. சிற்பி இராசனின் மந்திரமா? தந்திரமா? அறிவியல் விளக்க நிகழ்ச்சி காண்போரை வெகுவாக ஈர்த்தது. வெங்கடேஷ்(பகுதிச் செயலாளர் விசிக), அன்பு தனசேகர் (தலைமைக் குழு உறுப்பினர் திவிக), ஆகியோர் சிறப்புரையாற்றினார். இந்திரகுமார் தேரடி( ஊடகவியலாளர்) ஜாதி பெருமைக்குரிய அடையாளமா? என்ற கேள்விகளோடு பல வரலாற்று செய்திகளை எடுத்துக்காட்டி பரப்புரையில் தேவை குறித்து நிறைவுரையாற்றினார்.

சாரநாத் (மாவட்டச் செயலாளர் விசிக) கழகத்தின் இந்த பரப்புரை ஒருங்கிணைத்த சென்னை இரா. உமாபதியை (மாவட்டச் செயலாளர்) பாராட்டி பயனாடை அணிவித்தார். ஆய்வாளர். தமிழ் காமராசர் தன் குடும்பத்துடன் கலந்து கொண்டார். உரையாற்றிய தோழர்களுக்கு கழக வெளியீடுகளை தோழர்கள் கோபி, த.நா சூர்யா, அசோக் ஆகியோர் வழங்கினர்.

**மூன்றாம் நாள்** (14.08.2025) அன்று NKT பள்ளி அருகில் ஐஸ்ஹவுஸ் பகுதியில் ராஜேஷ் (பகுதி செயலாளர்) தலைமையில் நடைபெற்றது. சிற்பி ராசனின் மந்திராமா? தந்திரமா அறிவியல் விளக்க நிகழ்ச்சி பொதுமக்களை சிந்திக்க வைக்கும் விதமாக அமைந்தது. தொடக்க உரையாக இரா.உமாபதி (மாவட்டச் செயலாளர்) உரையாற்றினர். மைனர் (யூ2புரூடஸ்) ஜாதி வெறி அரசியலை தன்னுடைய நகைச்சுவை பாணியில் சிறப்புரையாற்றினார். கருத்துரையாற்றிய மைனர் அவர்களுக்கு சைதை அன்பரசன் கழக வெளியீடுகளை வழங்கினார். பொதுமக்கள் ஆர்வத்துடன் கருத்துக்களை கேட்டுச் சென்றனர்.

தெருமுனைக் கூட்டங்களை இரா. உமாபதி (சென்னை மாவட்டச் செயலாளர்) ஒருங்கிணைத்தார். ரங்கநாதன்(அர்ச்சகர் பயிற்சி பெற்ற மாணவர் சங்கத் தலைவர்), ஆய்வாளர் தமிழ் காமராசர், கழகத் தோழர்கள் தபசிகுமரன் (தலைமை நிலையச் செயலாளர்), வேழவேந்தன் (மாவட்டத் தலைவர்), மகி எட்வின் பிரபாகரன் (மாவட்ட அமைப்பாளர்), ப.அருண் (இளைஞரணி அமைப்பாளர்), சேத்துப்பட்டு இராசேந்திரன் (வடசென்னை மாவட்டத்தலைவர்), தட்சணாமூர்த்தி (வடசென்னை மாவட்ட அமைப்பாளர்), அ.வ வேலு (வடசென்னை மாவட்டச் செயலாளர்), தமிழ்நாடு மாணவர் கழக மாவட்ட ஒருங்கிணைப்பாளர் பேரன்பு, தமிழ்நாடு மாணவர் கழக மாவட்ட அமைப்பாளர் இளவரசன், மாணவர் கழக ஈரோடு மாவட்ட அமைப்பாளர் சர்மிளா, மாணவர் கழகத் தோழர் குடிஅரசு, குறளரசி, மற்றும் வட சென்னை தோழர்கள் அருள்தாஸ், ஏசுக்குமார், மயிலாப்பூர் சுகுமார், கழகத் தோழர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**திருப்பூர்:** மாவட்டக் கழகத்தின் சார்பில் தெருமுனைக் கூட்டங்கள் கழகத்தின் தொடக்க நாளான ஆக.12 மற்றும் ஆக.13 ஆகிய நாட்களில் நடைபெற்றது.

**ஆக.12 முதல் கூட்டம்** மாலை 04.00 மணியளவில் திருப்பூர் ஒன்றியம் அருள்புரம் பகுதியில் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு சண்முகம் (பல்லடம் ஒன்றிய அமைப்பாளர்) தலைமை தாங்கினார்.

**ஆக.12 இரண்டாவது கூட்டம்** மாலை 06.00 மணி அளவில் பொங்கலூரில் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு பொங்கலூர் கார்த்தி தலைமை தாங்கினார். துரைசாமி (கழகப் பொருளாளர்), கணக்கன் (மடத்துக்குளம் ஒன்றியத் தலைவர்), பரிமளராசன் (கழக சமூக ஊடக பொறுப்பாளர்), முகில்ராசு (திருப்பூர் மாவட்டத் தலைவர்), முத்து (மாநகர அமைப்பாளர்) ஆகியோர் உரையாற்றினர். தோழர்கள் செம்பரிதி, கோவிந்தராஜ் (பல்லடம் நகர அமைப்பாளர்) ஆகியோர் நன்றியுரை ஆற்றினர். கழக ஆதரவாளர் தோழர் மயில்சாமி கழகத் தோழர்களுக்கு தேநீர் வழங்கி சிறப்பித்தார்.

**ஆக.13 இரண்டாம் நாள் பொதுக்கூட்டம்** பல்லடம் லட்சுமி மில்ஸ் பகுதியில் முதல் கூட்டமாக மாலை 04.00 மணிக்கு தொடங்கி நடைபெற்றது. கூட்டத்திற்கு சண்முகம் (பல்லடம் ஒன்றிய அமைப்பாளர்) தலைமை தாங்கினார். கூட்டத்தில் பரிமளராசன் (கழக சமூக ஊடகப் பொறுப்பாளர்), தமிழ்நாடு மாணவர் கழகத் தோழர் தேன்மொழி, முகில் ராசு (திருப்பூர் மாவட்டத் தலைவர்) ஆகியோர் உரையாற்றினர். தோழர் செம்பரிதி நன்றியுரை ஆற்றினார். கழகத்தின் தெருமுனை கூட்டத்திற்கு வருகை தந்த திமுக முன்னாள் மாவட்ட அவைத்தலைவர் திருமூர்த்தி அவர்கள் கழகத்தின் பரப்புரையை வாழ்த்தியும் பாராட்டியும் பேசி கழகத் தோழர்களுக்கு புத்தகங்களை பரிசளித்தார். வந்திருந்த தோழர்கள் அனைவருக்கும் தேநீர் வழங்கினார்.

**ஆக.13 இரண்டாவது தெருமுனைக் கூட்டம்** பல்லடம் என்.ஜி.ஆர் சாலையில் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு கோவிந்தராஜ் (பல்லடம் நகர அமைப்பாளர்) தலைமை தாங்கினார். கூட்டத்தில் பரிமளராசன் (கழக சமூக ஊடகப் பொறுப்பாளர்), துரைசாமி (கழகப் பொருளாளர்), முகில்ராசு (மாவட்டத் தலைவர் ) ஆகியோர் உரையாற்றினர். மாணவர் கழகத் தோழர் ஈழமாறன் நன்றியுரையாற்றினார்.

தெருமுனைக் கூட்டங்களுக்கான ஏற்பாட்டுப் பணிகளை துரைசாமி (கழகப் பொருளாளர்) அவர்களும், ஒருங்கிணைப்புப் பணியை முகில் ராசு (மாவட்டத் தலைவர்) அவர்களும் சிறப்பாக செய்திருந்தனர். இத்தெருமுனைக் கூட்டங்களில் சிவானந்தம் (மடத்துக்குளம் ஒன்றியச் செயலாளர்), அய்யப்பன் (திருப்பூர் வடக்கு ஒன்றிய அமைப்பாளர்), மாதவன் (திருப்பூர் மாநகர அமைப்பாளர்), மாரிமுத்து (திருப்பூர் மாநகர துணைத் தலைவர்), சிற்றஜா, மாணவர் கழக கனல்மதி, சுபாஷ், ஆகியோர் பங்கேற்றனர்.

# 1947 ஆகஸ்ட் 15-ல் ஆர்.எஸ்.எஸ் ஏற்றிய ஹிட்லர் கொடி

தேசத்துக்கு மாபெரும் தொண்டாற்றிய அமைப்பு ஆர்.எஸ்.எஸ் என்கிறார் மோடி. உலகின் மிகப்பெரும் தொண்டு நிறுவனம் என்றும் புகழாரம் சூட்டியது, சுதந்திரதின கொடியேற்று விழாவில்.

ஆகஸ்ட் 15 சுதந்திர நாளை பெரியார் 'துக்க நாள்' என்று வெளிப்படையாகவே அறிவித்தார். அதிகாரம் பிரிட்டிஷாரிடமிருந்து பார்ப்பனிய பனியாவுக்கு கைமாற்றப்பட்டது என்றார். இதற்காக பார்ப்பனியம் பெரியாரை 'தேச விரோதி' என்று முத்திரை குத்தியது. பார்ப்பன தேசத்துக்கு நான் விரோதி தான் என்று பெரியார் அறிவித்தார்.

ஆனால் தேச பக்தி வேடம் போடும் ஆர்.எஸ்.எஸ் சுதந்திர தினத்தில் என்ன செய்தது? பிரிட்டிஷ்ஷார் ஆட்சி உரிமையைத் தங்களிடம் விட்டுச் செல்வார்கள் என்று அவர்கள் கனவில் மிதந்து கொண்டு இருந்தார்கள், வெளிப்படையாக சில இடங்களில் பேசினார்கள். இஸ்லாமிய வெறுப்பைக் கடுமையாக கண்டித்த காந்தியையும் நேருவையையும் தங்கள் எதிரிகளாக கருதினார்கள், அதற்காக காந்தியின் உயிரையே விலையாக கேட்டவர்கள், ஆகஸ்டு 15 சுதந்திர நாளில் அவர்கள் என்ன செய்தார்கள்?

**"இந்தியா சுதந்திரம் அடைந்த நாளில் பூனாவில் தேசியக்கொடிக்கு பதிலாக ஹிட்லரின் "ஸ்வஸ்திகா" கொடியை ஏற்றினார்கள். அந்த கொடியில் 'ஆரியர் சின்னம்' ஒன்றை இணைத்தார்கள். இந்த செய்தியை மிகச் சிறந்த ஆய்வு நூலாக வெளிவந்த "நள்ளிரவில் வந்த சுதந்திரம் (Freedom at Midnight)" அம்பலப்படுத்தியது.**

500 பேர் திரண்டு அந்த கூட்டத்தில் முதல் வரிசையில் நின்றது காந்தியை சுட்டுக் கொன்ற நாதுராம் கோட்சே என்ற உண்மையையும் அந்த நூல் அம்பலப்படுத்தியது.

சுதந்திர நாள் விழாவில் ஹிட்லர் கொடியை ஏற்றிய அந்த கூட்டத்தைத் தான் இப்போது சுதந்திர நாள் விழா கொண்டாட்டத்தில் உலகின் மிகப்பெரும் தொண்டு நிறுவனம் என்று புகழாரம் சூட்டுகிறார் மோடி.

# தலையங்கம்

# பார்ப்பன "தீண்டாமை"

வைணவ கோயில்களில் அர்ச்சகர் உரிமை மட்டும் அல்ல, பிரசாதம் விற்கும் உரிமையும் 'வைணவ பிராமணர்களுக்கு' மட்டுமே உண்டு என்று உயர் நீதிமன்றத்தில் பார்ப்பனர் ஒருவர் வழக்கு தொடர்ந்தார்.

காஞ்சிபுரம் தேவநாதன் கோயிலில் பிரசாத விற்பனை நிலையம் அமைக்க இந்து அறநிலையத்துறை ஏல அறிவிப்பை வெளியிட்டது. அந்த ஏலத்தில் அனைத்து பிரிவுகளும் பங்கேற்க முடியும் என்று அறிவித்திருந்தது. இதற்கு வைணவ 'பிராமணர்களுக்கு' மட்டுமே உரிமை என்றும் ஏனைய சமூகத்தினர் இதில் பங்கேற்க உரிமை கிடையாது என்றும் அறநிலையத்துறை அறிவிப்பை ரத்து செய்ய வேண்டும் என்றும் அந்த பார்ப்பனர் வழக்கு மனுவில் குறிப்பிட்டிருந்தார்.

காலம் காலமாக பார்ப்பன வைணவர்களுக்கு மட்டுமே இந்த விற்பனை நிலையத்திற்கு உரிமை வழங்கப்பட்டு வருகிறது என்றும், பழக்க வழக்கங்களை மாற்றக்கூடாது என்றும் அந்த மனுவில் குறிப்பிட்டிருந்தார். மேலும் கடந்த ஆண்டில் வைணவ பார்ப்பனர் அல்லாத ஒருவருக்கு உரிமை வழங்கப்பட்டதால் பெருமாள் வளாகத்தின் புனிதம் மீறப்பட்டது என்றும், பிரசாதத்தில் பெருமாளுக்கு எதிராக பூண்டு, வெங்காயம், முருங்கைக்காய் உணவுகள் சேர்க்கப்பட்டன என்றும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

உலகில் எந்த நாட்டிலும் உணவுக்கான கலாச்சாரத்தில் பாகுபாடுகள் கிடையாது. அவரவர் விரும்பும் உணவை அவரவர் சாப்பிட முடியும். இந்த நாட்டில் மட்டும்தான் அசைவம், சைவம் என்ற உணவுப் பாகுபாட்டை உருவாக்கி அதிலும் பார்ப்பனியம் நுழைந்து விட்டது.

அசைவ உணவு தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட ஜாதிகளின் உணவாக பிரிக்கப்பட்டது. பிற்படுத்தப்பட்ட சமூகத்திலேயே பெரும்பகுதியினர் அசைவ உணவில் இருந்து மாட்டுக்கறியை விலக்கி அது தீண்டப்படாத மக்களுக்கான உணவு என்ற பார்ப்பன மனநிலையில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். நாங்கள் மாட்டுக்கறி சாப்பிட மாட்டோம் என்ற பெருமையோடு கூறிக்கொள்கிறார்கள்.

பார்ப்பனர் அல்லாத உயர்ஜாதியினர் தங்களை பார்ப்பனர்களுக்கு சமமாக உயர்த்திக் கொள்கின்றனர். நாங்கள் சைவ உணவுக்காரர்கள் அசைவம் சாப்பிடுவதில்லை என்று அவர்கள் கூறிக் கொள்கிறார்கள். ஆனால் பார்ப்பனர்கள் எங்கள் சைவம் என்பது வேறு; எங்களுடைய சைவத்தில் பூண்டு, வெங்காயம், முருங்கைக்காய் கிடையாது என்று கூறி உயர்ஜாதியினரை தனியாக ஒதுக்கி விடுகிறார்கள். பார்ப்பன சைவத்தில் பூண்டு, வெங்காயத்திற்கு இடமில்லை பார்ப்பனர் அல்லாத அசைவத்தில் மாட்டுக்கறிக்கு இடமில்லை; ஆக உணவிலும் கொடி கட்டி பறந்து கொண்டு இருக்கிறது பார்ப்பனியம்.

சமூகக் கட்டமைப்பில் கீழ் நிலையில் இருந்து மேல் நோக்கி நகரும் மாற்றங்கள் நிகழும் போது, இந்த நாட்டில் மட்டும் அது பார்ப்பனியத்தை நோக்கியே நிகழ்கிறது. இந்த மாற்றங்கள் நிகழும் போது அது தனக்குக் கீழானவர்களின் இருப்பை உறுதி செய்யத் துடிக்கிறது. அது பிற்படுத்தப்பட்ட பார்ப்பனியமாகவும், தலித் பார்ப்பனியமாகவும் சமூகத்தை இயக்குகிறது. பிற்படுத்தப்பட்ட மக்களுடைய பார்ப்பனியம் தீண்டாமை சுவராகவும், ஆணவப் படுகொலைகள் ஆகவும் கோரத் தாண்டவமாடுகின்றன.

'பிராமணர்களாக' தங்களை அடையாளப்படுத்துகிறவர்கள் அவர்களுக்காக விதிக்கப்பட்ட தர்மங்களை தாராளமாக மீறுகிறார்கள். பிரசாத விற்பனை என்பது வர்ணாஸ்ரமப்படி 'பிராமணர்களுக்கான' உரிமை அல்ல அது வைசியர்களுக்கான உரிமை. ஆனால் 'பிராமணர்கள்' அதை தங்களுக்கு உரிமை கோருகிறார்கள். வணிக உரிமை பற்றி ஆகமத்தில் இருக்கிறதா? என்று கேட்டால் அது காலம் காலமாக பின்பற்றப்படுகின்ற பழக்க வழக்கம் என்கிறார்கள்.

வழக்கை விசாரித்த நீதிபதி ஆனந்த் வெங்கடேஷ் மனுவை தள்ளுபடி செய்து வழங்கி உள்ள தீர்ப்பில் கீழ்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

> **"மனுதாரரின் கோரிக்கை ஜாதி அமைப்பை நிலை நிறுத்துவதாக உள்ளது. கோயில்களில் வழிபாடுகள், சடங்குகள் முறையாக நடத்த 'பிராமணர்களுக்கு' மட்டுமே உரிமைக்கோர முடியாது. வைணவம் 'பிராமணர்களுக்கு' மட்டுமே சொந்தமானது அல்ல! அப்படி உரிமை கேட்பது வைணவத்திற்கு பெருமை சேர்க்காது".**

என்று தனது தீர்ப்பில் சுட்டிக்காட்டி உள்ளார்.

பிரசாதம் தயாரிக்கும் சமையலறை, திருமேனியை (சிலையை) பாதுகாத்தல், கோயில் சடங்குகள் உள்ளிட்டு அனைத்திலும் வைணவ பார்ப்பனர்களே பங்கெடுக்கிறார்கள் என்றும், விற்பனையில் மட்டும் தான் மற்றவர்களுக்கு உரிமை தரப்படுகிறது என்றும் இந்து அறநிலையத்துறை நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருக்கிறது.

இது எதை வெளிப்படுத்துகிறது? கோயில்கள் பார்ப்பனர்கள் கட்டுப்பாட்டில் மட்டுமே இருக்கிறது. 'சூத்திர-பஞ்சமர்' தீண்டாமைக்கு அறநிலையத்துறையே பாதுகாப்பு தர வேண்டியிருக்கிறது என்ற உண்மையைத்தான் இது உறுதி செய்கிறது.

தீண்டாமைக்கான கருத்துகளின் மூல ஊற்று இங்கேதான் இருக்கிறது. தீண்டாமைக் கொடுமைகளை எதிர்த்து நடக்கும் போராட்டக் களத்தில் அதற்கு கருத்தியலை வழங்கிக் கொண்டிருக்கும் இந்த பார்ப்பனியத் தீண்டாமையையும் மக்கள் மன்றத்தில் அம்பலப்படுத்த வேண்டும். இதுவே பெரியார், அம்பேத்கர் காட்டிய கொள்கை வெளிச்சம்!

## பா.ஜ.காவின் வஞ்சக அரசியல்

குடியரசு துணைத் தலைவர் பதவி என்ற அரசமைப்பு பதவியை கட்சி அரசியலுக்காக வழமைக்கு மாறாக இடையில் பறித்துவிட்டு, புதிதாக குடியரசு துணைத் தலைவர் பதவிக்கு தேர்தல் நடத்துகிறார்கள்.

தாங்கள் நடத்திய அரசியல் விளையாட்டுக்கு அனைத்து கட்சிகளும் துணைக்கு வர வேண்டும் என்று கேட்பதும் அதுவும் தமிழரை நாங்கள் நிறுத்தி இருக்கிறோம் என்று பேசுவதும் 'ஏமாற்று அரசியல்' தான்.

வேட்பாளர் சிபி. ராதா கிருஷ்ணனுக்காக பாஜக தமிழ்நாட்டு முதலமைச்சரிடம் ஆதரவு கேட்பது எதற்காக?

பாஜகவின் தமிழ்நாட்டு வஞ்சிப்புக் கொள்கைக்கு நீங்களும் துணை வரவேண்டும் என்பதற்காகவா?

சி .பி.ராதாகிருஷ்ணன் தன்னுடைய அடையாளத்தை தமிழராக ஏற்க வில்லை இந்துவாகத்தான் அவர் ஏற்றுக் கொண்டிருக்கிறார். இந்தியாவை பாரத தேசம் என்று மாற்ற வேண்டும் என்று வலியுறுத்தி வருகிறார். அவர் மாநிலங்களவைத் தலைவராக வந்ததற்குப் பிறகு தமிழ்நாட்டு மாநிலங்களவை உறுப்பினர்களின் உரிமைக் குரலை அவர் அனுமதிக்கப் போவதும் இல்லை. இதுவரை தமிழ்நாட்டு உரிமைக்கு குரல் கொடுத்ததும் இல்லை.

"தமிழர் என்று கூறப்பட்ட ஆர்.வெங்கட்ராமன் குடியரசுத் தலைவராக இருந்த போது தான், திமுக ஆட்சியைக் கவிழ்க்க தமிழ்நாடு ஆளுநர் பர்னாலா 356 சட்டப் பிரிவில் கையெழுத்திட மறுத்த போதும் தனது குடியரசுத் தலைவர் அதிகாரத்தைப் பயன்படுத்தி கையெழுத்திட்டு திமுக ஆட்சியைக் கவிழ்த்தார். இந்திய அரசியல் வரலாற்றில் இப்படி ஒரு சம்பவம் இதுவரை நிகழ்ந்தது இல்லை இது தமிழ்நாட்டு குடியரசுத் தலைவர் ஆர். வெங்கட்ராமனின் சாதனை".

முற்போக்கு கூட்டணி ஆட்சியின் போது குடியரசுத் தலைவர் பதவியே கலைஞரைத் தேடி வந்தது, கலைஞர் மறுத்து விட்டார். எனது உயரம் எனக்கு தெரியும் என்றார்.

குடியரசு தலைவர் ஆனாலும், குடியரசு துணைத் தலைவர் ஆனாலும் ஆளுங்கட்சியின் ஆணையை ஏற்று செயல்படப் போகிறவர்கள் தான் மீறினால் ஜகதீப் தன்கரைப் போல் காணாமல் போய்விடுவார்கள். தமிழ்நாட்டில் இருந்து ஒருவர் வந்துவிட்டாலே தமிழ்நாட்டுக்கு உரிமை கிடைத்துவிட்டது என்று நம்புவது நம்மை நாமே ஏமாற்றிக் கொள்வதுதான்.

ஒரு தமிழரை திமுக ஆட்சி ஆதரிக்கவில்லை என்று தேர்தல் பிரச்சாரத்தில் பயன்படுத்திப் பார்க்கலாம் என்ற அரசியலை கையில் எடுக்கிறது பாஜகவும் அதிமுகவும். இந்த உருட்டுகளை மக்கள் நம்ப மாட்டார்கள்.

## கழகம் தொடங்கிய ஆக-12-ல் தோழர்கள் கொடியேற்றும் விழா



**சென்னை:** கழகம் 14-ம் ஆண்டு துவக்க விழா சென்னை மாவட்டக் கழகம் சார்பில் இராயப்பேட்டை பத்ரி நாராயணன் நினைவு படிப்பகத்தில் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் தலைமையில் கொடியேற்றி பெரியார் சிலைக்கு மாலை அணிவித்து கொள்கை முழக்கங்கள் எழுப்பப்பட்டது.

கழகத் தோழர்கள் தபசி குமரன் (தலைமை நிலையச் செயலாளர்), அன்பு தனசேகர் (தலைமைக் குழு உறுப்பினர்),வேழவேந்தன்(மாவட்டத் தலைவர்), இரா.உமாபதி (சென்னை மாவட்டச் செயலாளர்), ம.கி எட்வின் பிரபாகரன் (மாவட்ட அமைப்பாளர்), ப.அருண்( இளைஞரணி அமைப்பாளர்), சேத்துப்பட்டு இராசேந்திரன் (வடசென்னை மாவட்டத் தலைவர்), தட்சணாமூர்த்தி (வடசென்னை மாவட்ட அமைப்பாளர்), கோபிநாத் (திருவல்லிக்கேணி பகுதி தலைவர்), த.நா சூர்யா (திருவல்லிக்கேணி பகுதி அமைப்பாளர்) மற்றும் தமிழ்நாடு மாணவர் கழகத் தோழர்கள் தோழி, குறளரசி மற்றும் கழகத் தோழர்கள் பலர் கலந்து கொண்டனர்.



**சேலம்:** மாவட்டக் கழகத்தின் சார்பில் 12.08.2025 மாலை 5.00 மணியளவில் கோனூர் சமத்துவபுரத்தில் உள்ள தந்தை பெரியார் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி உறுதிமொழி எடுக்கப்பட்டது.

இதில் கோவிந்தராஜ் (சேலம் மேற்கு மாவட்டச் செயலாளர்), கிருஷ்ணன் (சேலம் மாவட்ட ஒருங்கிணைப்பாளர்), ராஜேந்திரன் (நங்கவள்ளி ஒன்றியச் செயலாளர்), சந்திரசேகரன் (நங்கவள்ளி நகரச் செயலாளர்), பன்னீர்செல்வம் (வனவாசி நகர பொருளாளர்), மேட்டூர் அம்ஜத்கான், தேன்மொழி, அருள்மொழி, கீதா, பிரபாகரன் (சேலம் மாவட்ட இளைஞர் அணிச் செயலாளர்), சிவ சண்முகம் (சேலம் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர்), திவாகர் (சேலம் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர்), நாகராஜ் (தமிழ்நாடு மாணவர் கழக மாவட்ட அமைப்பாளர் ), அறிவுச் செல்வன் (கொளத்தூர் நகரச் செயலாளர்), ஆர்.எஸ் சௌந்தர், ஜெகதீஸ், நங்கவள்ளி கி.பிரபாகரன், பேரறிவாளன், தமிழருவி, நிலவன் ஆகியோர் கலந்து கொண்டனர்.



**ஈரோடு:** மாவட்டக் கழகத்தின் சார்பில் 12.08.2025 அன்று குருவரெட்டியரில் தந்தை பெரியாரின் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

காவை ஈஸ்வரன் (தலைமைக் குழு உறுப்பினர்), குருவை நாத்திக ஜோதி (ஈரோடு வடக்கு மாவட்டத் தலைவர்), காவை விஜய் குமார் (கொளத்தூர் ஒன்றிய பொறுப்பாளர்), குமரேசன், ராஜா, ஆசிரியர் செல்வேந்திரன் ஆகியோர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# கடவுளின் குரலை “மனம்” பேசுகிறதா?

## கொளத்தூர் நாத்திக விழா சிந்தனை (11)

***கேள்வி: மனம் ஒரு குரங்கு, மனசை அடக்கு என்று ஆன்மிகவாதிகள் கூறுகிறார்கள். மனமும், சிந்தனையும் ஒன்றா? 'சிந்தனைசெய் மனமே' என்று திரைப்படப் பாடல் சொல்கிறதே! மனதும் அறிவும் வெவ்வேறுதானே! அப்படியாயின், மன நிம்மதிக்கு ஆன்மீகம் என்பது சரிதானே?***

மனசெல்லாம் மத்தாப்பு, மனநிம்மதி, மனநிறைவு, மனசாட்சி இப்படி ஏராளமான சொற்களை அன்றாடம் புழங்கிக்கொண்டிருக்கிறோம். மனம் ஒரு குரங்கு என்று ஆன்மீகவாதிகள் மட்டுமா சொன்னார்கள்? இல்லை. "மனசாட்சி தூங்கும் போது மனக்குரங்கு ஊர்சுற்றக் கிளம்பிவிடுகிறது" என்பது கலைஞர் சினிமா வசனமும் கூட. மார்க்சின் எழுத்துகளில் கூட மனசாட்சி என்ற சொல்லைக் காண முடியும். மனம் என்ற சொல் ஆன்மீகத்துக்கு பட்டாபோட்ட சொல் அல்ல; ஆனால் எது மனம் என்பதை விளக்குவதில்தான் ஆன்மீகவாதிகளும் பகுத்தறிவாளர்களும் மாறுபடுகின்றனர்.

மனம் என்பது தனித்து சுயம்புவாக இயங்குவதாக ஆன்மீகவாதிகள் சித்தரிப்பர். ஆனால் மனம் என்பது மூளை என்ற உறுப்பின் செயல்பாடென அறிவியலாளர் கூறுவர். மகிழ்ச்சி, கோபம் என பல்வேறு உணர்ச்சிகளை மூளையே உணர்கிறது. அப்போது இரத்த ஓட்டமும் இதயத்துடிப்பும் மாறுபடும்; நெஞ்சில் கைவைப்போம்; இதனால் மனம் இதயத்தோடு சம்பந்தப்பட்டதாகக் கருதிவிட்டோம். ஆனால் அது மூளையின் செயல்பாடே. மனம் என்பது மூளையின் உணர்ச்சிப் பிரதேச செயல்பாடே. அன்பு, பாசம், இரக்கம் போன்ற நல்லுணர்வுகளும் மூளையின் அறிவுச்சேகரங்களே.

'மனோவியல் அல்லது உளவியல் செயல்பாடுகள் உடலிலிருந்து தனித்திருக்கக்கூடிய தனிமனிதச் செயல்பாடுகள் எனக் கருத்து முதல்வாதம் சொல்கிறது. ஆனால் மனோவியல் செயல்பாடுகள் உயர்ந்த மட்ட வளர்ச்சி அடைந்த பருப்பொருளின்; அதாவது மூளையின் செயல்பாடுகள் என்று மார்க்சியம் கூறுகிறது." என்கிறார் இயக்கவியல் பொருள் முதல்வாதம் எனும் நூலில் மாரிஸ் கான்போர்த். பா. வீரமணி எழுதியுள்ள "மனமென ஒன்று உண்டா?" என்கிற நூலில் "மனம்" குறித்த ஒரு பரந்த விவாதத்திற்குத் தளம் அமைத்துள்ளது. வாசலைத் திறந்துள்ளது.

மேலும் நம் சிந்தனை சூனியத்தில் பிறக்கவில்லை. நாம் காண்கிற. நாம் அனுபவிக்கிற, நாம் ஊடாடுகிற சமூகத்தின் பிரதிபலிப்பே ஆகும். மனம், சிந்தனை எல்லாமே மூளையின் செயல்பாடுகள். மனம்,சிந்தனை இரண்டும் மூளையின் செயல்பாடாக இருப்பினும் ஒன்றல்ல – வெவ்வேறு தளத்தில் ஆனவை. இந்த சமூகத்தின் பிரதிபலிப்பு.இந்தப் பொருள் பல நூறு பக்கங்கள் கொண்ட நூலாகும் அளவுக்கு விரிந்தது.

மூளைச்சாவு அடைந்துவிட்டால் அப்புறம் எதுவும் இல்லை என்கிற அனுபவ உண்மையை மனதில் நிறுத்துவோம். மனம் பேதலித்தவனை, பைத்தியம் பிடித்தவனாக மூளை பிசகியவனாகவே கருதி சிகிச்சை அளிப்பதையும்; பல்வேறு வேதியியல் மருந்துகள் மூலம் சமநிலைக்கு கொண்டுவருவதையும் பார்க்கிறோம். மனதை ஒருமுகப்படுத்துவது என்பது ஆன்மீகம் சார்ந்ததல்ல. அது பயிற்சியே. தனக்கு விருப்பமான ஒன்றில் முழுக்கவனத்தையும் செலுத்தும்போது மனம் மகிழ்கிறது. எடுத்துக்காட்டு: சங்கீதத்தில் மூழ்குவது. எனக்கு புத்தகம் படிக்கும்போது எதிரில் என்ன நடந்தாலும் தெரியாது. இப்படி யோசித்துப் பாருங்கள் உங்களுக்கே எல்லாம் விளங்கும்.

> **மனதின் குரல் என்று மோடி பேசுகிறார், கடவுளின் குரலே என்னை வழிநடத்துகிறது என்கிறார் நடிகர் ரஜினிகாந்த். மனிதர்களின் புலனறிவு உறுப்புகளுக்கு அப்பாற்பட்ட சக்தி தான் மனிதர்களை இயக்கிக் கொண்டு இருக்கிறது என்ற நம்பிக்கையில் தான் மக்களின் கடவுள் பக்தியே கட்டமைக்கப்படுகிறது. அப்படி 'மனம்' என்று ஒன்று உண்டா? அறிவியல் அதை இல்லை என்று மறுக்கிறது.**

***கேள்வி: நம்மை மீறி ஒரு இயற்கை சக்தி இருக்கிறது என்பதை ஒப்புக்கொள்வதில் அதை நம்புவதில் – வழிபடுவதில் உங்களுக்கு என்ன கஷ்டம்?***

இயற்கை சக்தி என்று சொல்லி விட்டீர்கள்! இதிலொன்றும் பகுத்தறிவாளர் மாறுபடுவதில்லையே! அதனை இறைவனாகக் கருதி சரணடைவதில்தான், வழிபடுவதில்தான் மாறுபடுகிறோம். ஆதி நாத்திகர்கள் அதாவது லோகாயவாதிகள் அல்லது பூதவாதிகள் கூட உலகம் பஞ்சபூதங்களினால் ஆனது என்பதை ஒப்புக்கொண்டவர்களே. நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் என பஞ்ச பூதங்கள் ஐந்தென வகுத்தனர். அன்றைய அறிவியல் புரிதலுக்கு உட்பட்டு அவ்வாறு அவர்கள் முடிவுக்கு வந்ததே மிகப்பெரிய முன்னேற்றமே.

பின்னர் வேதியியல் புரட்சி ஏற்பட்டபோது லாவோசியர், ஜோசப் பிரீஸ்ட்லி முதலியோர் நெருப்பு என்பது வெறும் வினை; அடிப்படைப் பொருளல்ல என நிறுவினர். காற்று என்பது ஆக்ஸிஜன், நைட்ரஜன்,கார்பன் என வாயுக்களின் கலவை எனக் கண்டனர். நீரென்பது ($H2O$) என கண்டு தெளிந்தனர். அதாவது ஹைட்ரஜன் இரண்டு பங்கும் ஆக்சிஜன் ஒரு பங்கும் சேர்ந்தால் நீர். இரத்தம், சதை, சிமெண்ட், சுல், மண் என எல்லாமே மூலக்கூறுகளின் கலவைதான் என அறிவியல் கண்டது.

இந்த மூலக்கூறுகள் அடிப்படையில் அணுக்களால் ஆனவை. தங்கம், இரும்பு, சோடியம், யுரேனியம் முதலிய 119 வகை அணுக்கள், தனிமங்கள் உள்ளன. இதில் 96 வகை தனிமங்கள் பூமியில் இயற்கையில் கிடைக்கும். அணுவே கடைசி கண்ணி அதைப் பிளக்க முடியாதென்பது டால்டன் கொள்கை. அடுத்த கட்டத்தில் ரூதர் போர்டு, ஜே.ஜே. தாமஸ் முதலானோர் அணுவைப் பிளந்து ஆராய்ந்து எலக்ட்ரான், புரோட்டான், நியூட்ரான் மற்றும் நியூட்ரினோ, மியூவான், மியூமிசான் என்கிற அணுத்துகள்களே அடிப்படை அலகு என்பதைக் கண்டு கூறினார்கள். அந்த எலக்ட்ரான்தான் இன்றைய கணினிப் புரட்சியின் அடித்தளம். அதனையும் உடைத்து குவார்க்குகள், க்ளுவான்ஸ்கள் என ஆய்வு முன்னேறுகிறது.

நியூட்ரினோதான் உலகெங்கும் நிறைந்துள்ள துகளெனக் கண்டு அதனை ஆய்வுக்கு உட்படுத்துகின்றனர். தமிழகத்தில் தேனியில் அமையும் நியூட்ரினோ நோக்குகூடம் அத்தகையதே ஆக இயற்கையை வழிபட்டு சரணடைந்திருந்தால் இவ்வளவு கண்டுபிடிப்புகளை செய்திருக்க இயலுமா?பகுத்தறிவு மேலும் விசாலமாக, மேலும் கூர்மையாக முன்னேறுகிறது. கணினிமுன் உட்கார்ந்துகொண்டு மதவெறிப் பிரச்சாரம் செய்பவரும் இந்த அறிவியலின் பலன் மீது நின்று கொண்டன்றோ செயல்படுகிறார்கள். இது ஒருபுறம் இருக்கட்டும்! எல்லாம் வல்ல ஒரே இயற்கை சக்தியே இறைவனெனில் இத்தனை மதங்கள் ஏன்? இத்தனை கடவுள்கள் ஏன்? இவ்வளவு மதவெறிச் சண்டைகள் ஏன்? இத்தனை மனித உயிர்களை காவு கொடுப்பது ஏன்? நீங்கள் சொல்லுகிற அந்த ஒற்றைக் கடவுள் எந்த மதம்? சொல்லுங்கள்!!

***கேள்வி: உலகில் யாருமே நாத்திகரில்லை. ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் வழியில் கடவுளை நம்புகிறார்கள்" என்பது சரியா? ஆத்திகர் கடவுளை நம்புகிறார். ஆனால் கடவுளைப் பற்றி அதிகம் பேசுவது நாத்திகரல்லவா? இல்லாத ஒன்றெனில் பேசிக்கொண்டே இருக்கவேண்டுமா?***

"கடவுள் கவலை எனக்கில்லை" என்பார் பாரதிதாசன்.

> "கடவுள் இருக்கு என்பதும் இல்லை என்பதும் கவைக்குதவாத வெறும் பேச்சு / கஞ்சிக்கில்லாதவன் கதை நூறிருக்கு அதை நீ பேசு"

என்பார் பட்டுக்கோட்டையும். நாமும் அதையே விழைகிறோம். ஆயினும், ஆத்திகர் கேள்வி எம்மை அது பற்றி பேச வைக்கிறது.

கேள்வியில் முன்வைக்கும் வாதம் புதிதல்ல. பண்டைய இந்தியாவில் உதயணர் எனும் ஒரு தத்துவவாதி இருந்தார். அவர் கடவுள் உண்டென நிரூபிக்க முயலும் "நியாயம்" என்ற தத்துவப் பிரிவைச் சார்ந்தவர். அவருடைய "நியாயகுஸிமாஞ்சலி" என்ற நூலைத்தான் ஆத்திகர்கள் 'கடவுளை' நிரூபிக்கத் துணையாகக் கொள்கிறார்கள். அவரும் இந்த கேள்வியில் கேட்கப்பட்டதை அதே வார்த்தைகளில் தன் வாதமாக முன்வைத்தார். அதற்கு ஆதாரமாக லோகாயவாதிகள் சிலரின் வார்த்தைகளைத் திருத்தி தன் வாதத்துக்குப் பயன்படுத்த முயன்றார்.டாக்டர் ராதாகிருஷ்ணன் கூட கம்யூனிசமும் ஒரு மதமே என வாதம் செய்தார். இது பட்டிமன்ற வாதம் போல் இருக்கிறது.

கடவுளை நம்பாதவர்களை மட்டிலுமே நாத்திகரென பகுத்தறிவாளர் வரையறை செய்கின்றனர்; அதுவே சரியானது. ஆனால் இஸ்லாம் மதம் அல்லாவை ஏற்காத பிறமதத்தவர் உட்பட எல்லோரையும் நாத்திகரென்று கூறும்; சனாதன பிராமண மதம் வேதத்தை ஏற்க மறுத்தாலே நாத்திகரென வசைபாடும். கிருத்துவமும் பிறமதத்தவரை நாத்திகரென்றே கணிக்கும். இப்படி இவர்களின் வெறுப்பு அளவுகோலால் பிறமத நம்பிக்கையாளரை நாத்திகரென்பதால் மேலே கேள்வியில் ஏற்பட்ட குழப்பம் ஏற்படுகிறது. எந்த மதத்தையும், எந்தக் கடவுளையும் ஏற்காதவரே நாத்திகர். இதனை உணர்ந்தால் குழப்பமே இல்லை. எந்தவழியில் கடவுளை நம்பிடினும் அவர் நாத்திகரில்லை.

ஆத்திகரென்பவர் கடவுள் பெயரால் பல சடங்குகள் சம்பிரதாயங்கள் மூடநம்பிக்கைகள் என மூழ்கிக் கிடக்கின்றனர்;அதை மறைக்கவே நாத்திகர் கடவுள் பற்றி அதிகம் பேசுவதாகப் பழி போட்டுத்தப்பிக்க முயல்கின்றனர்; புற்றுநோயில் விழுந்துகிடப்பவனைவிட; புற்றுநோய்க்கு எதிரான விழிப்புணர்வை விதைக்கிறவர்தான் அதிகம் பேசவேண்டும். பேசமுடியும். இது விழிப்புணர்வுக்கான பேச்சு. இதனையெல்லாம் தெரிந்துகொண்டே திசைதிருப்பும் விதமாக சாமர்த்தியமாக ஆத்திகவாதிகள் இப்படி சொற்போராட்டம் நடத்துவது நெடுங்காலமாக நடந்து வருகிறது. இதனை தத்துவ வாதத்தில் 'சாமான்ய சளா' அல்லது 'சாமான்ய சாலம்' என்பர். புரிகிறமாதிரி சொல்வதானால் "அறிவியல் அயோக்கியத்தனம்" என்கிறார் ஆய்வாளர் நா. வானமாமலை.

கடவுள் என்பது இல்லாததே; அதை இருக்குதென மற்றவர் பேசும்வரை மறுத்துப் பேசுவது இயல்பானதே. தேவையானதே! தொலைக்காட்சியில் ஒரு ஆன்மீகப் பேச்சாளர் மின்சாரத்தை கண்ணால் பார்க்கமுடிவதில்லை என்பதால் மின்சாரம் இல்லை என்று சொல்லமுடியுமா? அது போலத்தான் கடவுளும் என்றார். மின்சாரம் இருப்பதை விளக்கு எரிவதைக் கொண்டு அறியலாம்; தொட்டுப் பார்த்தால் ஷாக் அடிக்கும். மின்சாரத்தை உண்டாக்க முடியும் எங்கே எப்படி உண்டாக்கப்பட்டது என்கிற விவரம் உண்டு. கடவுளை உண்டாக்கிக் காட்டுங்கள் என சவால் விடலாமே! இப்படி இடக்கு மடக்கு வாதம் பயனில்லை. நாத்திகரைப் பொறுத்தவரை கடவுள் இல்லை. ஏனெனில் அறிவியல் பூர்வமாக இதுவரை கடவுள் இருப்பதாக நிரூபிக்கப்படவில்லை. அவ்வளவே!

**ஆதாரம்: சு.பொ. அகத்தியலிங்கம் எழுதிய "ஆன்மிகமா? அறிவியலா?" நூல்**

Posted at Egmore RMS,Pathirika Channel, Chennai-08
date of publication - every thursday tamil weekly Reg.No.tn/cc(S)Dn/459/25-27 licenced to post wpp no.tn/PMG(CCR)/WPP-462/25-27
puratchi periyar muzhakkam registered with the registrar of newspaper for india under no.tntam/2002/07776

# சவால் விட்ட தேர்தல் ஆணையம் சந்தி சிரிக்கிறது

தேர்தல் ஆணையம் நடத்தியுள்ள ஓட்டுத் திருட்டுகளை ராகுல் காந்தி ஆதாரத்துடன் அம்பலப்படுத்திவிட்டார். தேர்தல் ஆணையத்தின் முகத்திரை மக்கள் மன்றத்தில் கிழிந்து தொங்குகிறது! தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமார் ராகுல் காந்தியை மிரட்டுகிறார். குற்றச்சாட்டுகளை 'பிரமாண பத்திரத்தின்' ஆவணமாக கையெழுத்திட்டுத் தர வேண்டும், 7 நாட்களில் சமர்ப்பிக்காவிட்டால் ஆணைத்திடம் மன்னிப்பு கேட்க வேண்டும் என்று அவர் சவால் விட்டார்.

ஆனால் உச்சநீதிமன்றம் ராகுல் காந்தி கேட்ட கேள்வியை தேர்தல் ஆணையத்திடம் கேட்டபோது தேர்தல் ஆணையம் மண்டியிட்டுக் கிடக்கிறது. நீக்கப்பட்ட 65 இலட்சம் வாக்காளர்களுடைய பெயரை வெளியிட முடியாது என்று தேர்தல் ஆணையம் உச்சநீதிமன்றத்தில் மனு போட்டது. உச்சநீதிமன்றம் அதை ஏற்க மறுத்து விட்டது. நீக்கப்பட்ட வாக்காளர் பட்டியலை வெளியிட வேண்டும் என்று ஆணையிட்டது. ராகுல் காந்தியை மிரட்டி பார்க்கலாம், ஆனால் உச்சநீதிமன்றத்தை இவர்களால் மிரட்ட முடியுமா?

உத்தரவிட்ட 56 மணி நேரத்தில் நீக்கப்பட்டவர்களின் பெயர்ப் பட்டியலை மட்டும் தனது இணையதள பக்கத்தில் வெளியிட்டு முகத்தில் கரியை பூசிக் கொண்டது. ஆனால் அப்படி வெளியிட்ட பட்டியலில் முழுமையான விவரங்கள் தராமல் மறைக்கப்பட்டது தேர்தல் ஆணையம் நம்பகத்தன்மையை நிரூபிக்க வேண்டும் என்று தொடர்ந்து வலியுறுத்தி வரும் 'இந்து' ஆங்கில நாளேடு வெளியிடப்பட்ட இந்த பட்டியலில் உள்ள முரண்பாடுகளை சுட்டிக்காட்டி ஒரு தலையங்கம் தீட்டி இருக்கிறது.

நீக்கப்பட்டவர்களின் பட்டியலை வெளியிட்ட ஆணையம் அதற்கான காரணத்தை குறிப்பிடவில்லை ஏன்? இறந்தவர்களா? இடம் மாறியவர்களா? காணாமல் போனவர்களா? வெவ்வேறு இடத்தில் அந்த பெயர்கள் இடம் பெற்றதா? இந்த விவரங்கள் இல்லாமல் பெயர்களை மட்டுமே கொண்ட பட்டியலை ஆணையம் வெளியிட்டு இருக்கிறது.

நீக்கப்பட்டவர்களில் ஆண்களை விட பெண்களே அதிகம். சுமார் 32 லட்சம் பேர் பெண்கள், ஆண்கள் சுமார் 25 லட்சம் பேர் மட்டுமே. பீகாரில் இருந்து வேறு மாநிலங்களுக்கு புலம்பெயர்ந்து வந்தவர்களில் ஆண்களே மிக அதிகம். இதற்கு புள்ளி விவரங்கள் இருக்கின்றன.

அண்மைக் காலங்களில் பீகாரில் இறந்தவர்களுடைய எண்ணிக்கையும் பெண்களை விட ஆண்களே அதிகம். இந்த நிலையில் நீக்கப்பட்ட பெட்டியலில் பெண்களே அதிகமாக இருப்பது ஏன்?

உயிருடன் இருப்பவர்களை இறந்தவர்களாக நீக்கம் செய்துள்ளார்கள் (இறந்து போன வாக்காளர்களுடன் ராகுல் காந்தி தேநீர் விருந்து நடத்தியுள்ளார்).

உரிய ஆவணங்களை சமர்ப்பித்தவர்களே வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டுள்ளனர்.

வழமையாக வாக்காளர் சரிபார்ப்பு ஜனவரியில் தேர்தல் ஆணையத்தால் நடத்தப்படுகிறது. இப்போது சிறப்பு தேர்தல் திருத்தம் என்ற பெயர் சூட்டி 11 ஆவணங்களுடன் குடியுரிமையை உறுதி செய்யும் திட்டத்தை அமல்படுத்தும் தேர்தல் ஆணையம், சட்டப்படி செய்ய வேண்டிய வழமையான சரிபார்ப்பு நடவடிக்கையை தள்ளிவைத்துள்ளது இது சட்டப்படி சரியா?

தேர்தல் ஆணையம் வாக்காளர் பதிவுக்கு ஆதார், தேர்தல் ஆணைய அடையாள அட்டை, ரேஷன் கார்டுகளை ஏற்றுக் கொள்ள முடியாது என்று அறிவித்தது. பொதுமக்கள் பயன்பாட்டில் இருக்கும் இந்த அடையாளங்களை ஆணையம் ஏன் மறுக்கிறது? உச்சநீதிமன்றம் இதில் தலையிட்டு இந்த அடையாள அட்டைகளை ஆவணமாக ஏற்க வேண்டும் என்று உத்தரவிட்டது இந்த அடையாளங்களுடன் மீண்டும் பதிவுக்கு வரும் வாக்காளர்களைப் பட்டியலில் இணைக்க வேண்டும் என்றும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த சிறப்பு வாக்காளர்கள் சேர்க்கையில் வெளிப்படைத் தன்மை இல்லை என்று உச்ச நீதிமன்றம் எடுத்துரைத்துள்ளது. வயது வந்துள்ள அனைவருக்கும் வாக்குரிமை என்ற அரசியல் சட்டத்தின் நோக்கத்துக்கு எதிரானது இந்த திட்டம்! இயற்கை நீதியை சீர்குலைக்கிறது.

சிறப்பு வாக்காளர் சேர்க்கை சட்டத்திற்கு உட்பட்டது தானா? என்பதையும் உச்ச நீதிமன்றம் ஆராய இருக்கிறது என்று 'இந்து' நாளேட்டின் தலையங்கம் கூறுகிறது.

தேர்தல் ஆணைய உறுப்பினர்களை நியமிக்கும் குழுவில் உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி இடம் பெற்றிருந்தார். இதை உறுதி செய்து உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்த பிறகும் ஒன்றிய ஆட்சி, தேர்தல் ஆணைய விதிகளைத் திருத்தி உச்சநீதிமன்ற தலைமை நீதிபதியை குழுவில் இருந்து நீக்கிவிட்டது. பிரதமர், அவரால் அடையாளப்படுத்தப்படும் ஒருவர், எதிர்க்கட்சி தலைவர் ஆகிய மூவர்தான் தேர்தல் ஆணையக்குழுவை தேர்வு செய்வார்கள் என்று தேர்தல் ஆணையத்தை தனது கைபிடிக்குள் கொண்டு வந்து விட்டது ஒன்றிய ஆட்சி. இது தொடர்பான வழக்கு உச்சநீதிமன்றத்தில் இப்போது நிலுவையில் உள்ளது.

வாக்கு சாவடிகளில் பதிவான சிசிடிவி கேமரா காட்சிகளை வெளியிட வேண்டும் என்று ராகுல் காந்தி கேட்டார். வாக்களிக்க வந்த பெண்களின் உருவங்களை எப்படி வெளியிட முடியும் என்றும் உங்கள் தாய், மகள், சகோதரிகள் படத்தை வெளியிடுவீர்களா? என்று 'செண்டிமெண்ட்' பேசுகிறார் தேர்தல் ஆணையத்தின் தலைவர்.

"வாக்குச்சாவடி ஒன்றும் உடை மாற்றும் அறைகள் அல்ல" என்று பதிலடி தந்துள்ளார் நடிகர் பிரகாஷ்ராஜ். அப்படியானால் பெண்கள் முன் அனுமதி இல்லாமல் எப்படி ஆணையம் அவர்களை சிசிடிவி கேமராவில் பதிவு செய்தது என்று நெட்டிசன்கள் கேள்வி கேட்டு வறுத்தெடுக்கிறார்கள்.

தமிழ்நாட்டில் கடந்த தேர்தலில் பாஜக 11 சதவீத ஓட்டுகளை பெற்றதிலும் இத்தகைய தில்லுமுல்லுகள் அரங்கேறி உள்ளதாக புகார்கள் வந்துள்ளன. சென்னையில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய சமூக போராளி டீஸ்டா செடல்வாட் இந்த கேள்வியை எழுப்பியுள்ளார். தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களும் தேர்தல் ஆணையத்தை நோக்கி 7 கேள்விகளை எழுப்பி உள்ளார்.

ராகுல் காந்தி வீசிய வெடிகுண்டு தேர்தல் ஆணைய மோசடிகளை அம்பலப்படுத்தி இருக்கிறது, உலகின் மிகப்பெரும் ஜனநாயக நாட்டின் தேர்தல் தில்லுமுல்லுடன் நடப்பதை உலகம் கவனிக்க தொடங்கியுள்ளது.

## கல்லூரி மாணவர்களிடம் உரையாடல்



ராணிப்பேட்டை மாவட்டம் கல்லாறில், ஆகஸ்டு 9 அன்று SRED ஒருங்கிணைத்த சமூகப்பகுப்பாய்வுக் கூட்டத்தில், திவிக தென்சென்னை மாவட்ட அமைப்பாளர் ம.கி. எட்வின் பிரபாகரன் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்று, காலை 9 மணிமுதல் மாலை 4 மணிவரை, "பெரியார்" குறித்து பள்ளி - கல்லூரி மாணவிகளிடம் உரையாடினார். "இறுதி மூச்சு அடங்கும் வரை யாருக்காக உழைத்தார் பெரியார்?" எனும் திவிக நூலையும், "இரகசிய புத்தகம்" எனும் நன்செய் பிரசுர நூலையும், மாணவர்களுக்கு வழங்கினார்.

## தூய்மைப் பணியாளர்கள் போராட்டத்துக்கு ஆதரவு

சென்னையில் 2 வாரங்களாக நடைபெற்றுவரும் தூய்மைப் பணியாளர்களின் போராட்டத்தில், (11/8/25), தபசி குமரன் (தலைமை நிலையச் செயலாளர்), உமாபதி (சென்னை மாவட்டச் செயலாளர்), இராவணன் (தென்சென்னை மாவட்ட துணைச் செயலாளர்), மனோகர், ஜான் மண்டேலா (மகுஇ), மாரிமுத்து (திக) உள்ளிட்ட பல தோழர்கள் பங்கேற்று ஆதரவு தெரிவித்தனர்.

## இரசாயன விநாயகர் சிலைகளுக்குத் தடை கோரி கழகம் மனு

**திருப்பூர்:** 08-08-2025 அன்று திருப்பூர் மாவட்டக் கழகம் சார்பக காலை 10 மணி அளவில் விநாயகர் சதுர்த்தி என்ற பெயரில் பிளாஸ்டர் ஆப் பாரிஸ் என்று சொல்லக் கூடிய வேதி பொருட்கள், இரசாயன பொருட்கள், சுட்டகளிமண் போன்ற பொருட்களால் விநாயகர் சிலைகளை தயாரிக்க கூடாது.

அவ்வாறு இரசாயனம் கலந்து தயரிக்கப்பட்ட சிலைகளை நீரில் கரைத்து நீர்நிலைகளை மாசுபடுத்துவதை தடுக்க வேண்டும் அரசு முறையாக கண்காணித்து நீதிமன்ற உத்தரவுகளை பின்பற்ற வேண்டும் என வழியுறுத்தி மாவட்ட ஆட்சியரிடம் முகில் ராசு (மாவட்டத் தலைவர்) தலைமையில் கோரிக்கை மனு வழங்கப்பட்டது.

நிகழ்வில் சு.துரைசாமி (கழகப் பொருளாளர்), மாதவன் (மாநகரச் செயலாளர்), வீ.தனபால் (மாநகரத் தலைவர்), முத்து (மாநகர அமைப்பாளர்), அய்யப்பன் (வடக்கு ஒன்றியச் செயலாளர்) தமிழமுதன் (உளவியலாளர்) மற்றும் தோழர்கள் இனியன் வசந்தி, பெரியார் பிஞ்சு மகிழ்மாறன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**சேலம்:** மாவட்டக் கழகத்தின் சார்பில் 14.08.2025 அன்று மாவட்ட மாசுக்கட்டுப்பாட்டு அலுவலகத்தில் மனு அளிக்கப்பட்டது. இதில் டேவிட் (சேலம் கிழக்கு மாவட்டச் செயலாளர்), கிருஷ்ணன் (சேலம் மாவட்ட ஒருங்கிணைப்பாளர்), தங்கதுரை (சேலம் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர், நங்கவள்ளி அருள் ஆகியோர் மனு அளித்தனர்.

## சமூக நீதி எழுத்தாளர் சு.விஜயபாஸ்கர் நினைவேந்தல்



சமூக நீதி எழுத்தாளர் சு. விஜயபாஸ்கர் அவர்களின் படத்திறப்பு மற்றும் நினைவேந்தல் நிகழ்ச்சி 09.08.2025 அன்று தேவநேயப் பாவாணர் அரங்கத்தில் நடைபெற்றது. எழுத்தாளர் விஜயபாஸ்கர் ஆவணப்படம் திரையிடப்பட்டது.

திமுக இளைஞர் அணி செயலாளர் - தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சமூகநீதி எழுத்தாளர் சு. விஜயபாஸ்கர் படத்தைத் திறந்து நினைவேந்தல் உறையாற்றினார். மேலும் அவர் விஜயபாஸ்கரின் இணையர் காயத்திரி மற்றும் அவரது நண்பர்கள் இணைந்து 'விஜயபாஸ்கர்' அறக்கட்டளையை தொடங்கி வைத்தார். அறக்கட்டளைக்கு திமுக சார்பாக ரூ.5,00,000 காசோலை காயத்திரியிடம் வழங்கினார்.

கீழ்கண்ட 5 ஆங்கில மொழிப்பெயர்ப்பு நூல்கள் வெளியிடப்பட்டன.

தந்தை பெரியாரின் பெண் ஏன் அடிமையானாள், நாவலர் நெடுஞ்செழியன் எழுதிய மொழிப் போராட்டம், முத்துசாமிப் பிள்ளை எழுதிய நீதிக்கட்சி வரலாறு, பேராசிரியர் அன்பழகன் எழுதிய வகுப்புரிமைப் போராட்டம். (முதல் பகுதி மட்டும்), பேராசிரியர் ப.இராசாராம் ஆங்கிலத்தில் எழுதிய நீதிக்கட்சி குறித்த நூலின் ஒருபகுதி *The Birth of the Justice Party*.

நூல்களை மொழிப்பெயர்த்த தோழர்களுக்கு நினைவுப் பரிசை கழகத் தலைவர் கொளத்தூர் மணி வழங்கினார். பேராசிரியர் விநாயகம் ஒருங்கிணைப்பு பணிகளை செய்தார். கவிஞர் தம்பி தொகுத்து வழங்கினார்.

நிறைவாக கழகத் தலைவர் கொளத்தூர் மணி நினைவேந்தல் உரையாற்றினார்.

**அடுத்த இதழில்...**

மாநாடு போல் கொளத்தூரில் நடந்த "பெரியார் எனும் பெருநெருப்பு" கருத்தரங்கம் குறித்த விரிவான செய்திகள் அடுத்த இதழில்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS Under WPP
Posted : August 22, 2025

owner and publisher by : k. rajendran, from 29, Journalists colony, thiruvalluvar nagar, thiruvanmiyur, chennai - 600 041.
and printed by : S. Theesmas, at lilly soosai offset, new no.8, old No.12/1, mohammed usain lane, royapettah, chennai - 600 014.
editor ; k. rajendran